අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/08/01
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2025.07. 07

சுற்றுநிருப இலக்கம் : 23/2025

அனைத்து மாகாணப் பிரதம செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்,
அனைத்து பிரிவெனாதிபதிகள்/ நிறைவேற்று மதகுருமார்கள்,
அனைத்து அரச பாடசாலைகளதும் அதிபர்கள்,

**அரச பாடசாலைகளுக்கு வழங்கப்படும் நீருக்கான நீர்க் கட்டணப் பட்டியல்களை செலுத்துதல்**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் நீர் வழங்கப்படும் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளின் நீர்க் கட்டணப் பட்டியல்களை செலுத்துவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அப/23/1071/607/090 மற்றும் 2023.07.05ம் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அரச பாடசாலைகளுக்கு வழங்கப்படும் நீருக்கான கட்டணப் பட்டியல்களை செலுத்துவதற்குரியதான இச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகள் 2025.01.01 முதல் செல்லுபடியாகும்.

2. அதற்கமைய அரச பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் ஒரு மாணவர், ஒரு கல்விசார் மற்றும் கல்விசாரா பணிக்குழு உறுப்பினர், ஒரு நாளில் 20 லீட்டர் நீரைப் பயன்படுத்துவதாகவும் ஒரு மாதத்தில் 20 நாட்கள் இருப்பதாகவும் கருதி ஒரு நபரின் மாதாந்த நீர்ப் பாவனை 400 லீட்டர் என்பதைக் கருதுகோளாக கொண்டு நீர்ப் பாவனையானது கணிக்கப்படும். இதன் அடிப்படையில் பாடசாலை ஒன்றின் நீர்ப் பாவனையினைக் கணித்து மாதாந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட நீர்ப் பாவனைக்காக செலுத்த வேண்டிய கட்டணம் அரசினால் பொறுப்பேற்கப்படும்.

3. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினூடாக வழங்கப்படும் நீருக்கான கட்டணத்தை அறவிடும் போது மேற்படி கணிப்பீட்டிற்கமைய அரசினால் பெறுப்பேற்கப்படும் நீர் கட்டணத்தை அரச பங்களிப்பு (Govt contribution) எனும் தலைப்பின் கீழும், மேலதிகமாக நீர் பயன்படுத்தப்பட்டிருப்பின் அதற்குரிய கட்டணம், மேலதிக கட்டணம் (Extra Charges to School) எனும் தலைப்பின் கீழும் மாதாந்த நீர் கட்டணப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. நீர்க் கட்டணப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அரச பங்களிப்பின் கீழுள்ள கட்டணமானது (Govt contribution) தேசிய பாடசாலை ஒன்றாயின் கல்வி அமைச்சினாலும், மாகாணப் பாடசாலை ஒன்றாயின் மாகாணக் கல்வி அமைச்சினாலும் செலுத்தப்படும் என்பதுடன், மேலதிகக் கட்டணம் (Extra Charges to School) என்பதன் கீழ் உள்ள தொகையினை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாகவும், பிரிவெனா ஒன்றாயின் வருடாந்த நிதிக் கொடை/ பிரிவெனா அபிவிருத்தி நிதியம் மூலமும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்த வேண்டும். ஏதேனும் ஒரு பாடசாலையின் நீர்ப் கட்டணப் பட்டியலில் அரச பங்களிப்பின் (Govt contribution) கீழ் மாத்திரம் கட்டணத் தொகை குறிப்பிடப்பட்டிருப்பின், அத் தொகையினை குறித்த பாடசாலை செலுத்த வேண்டிய அவசியமில்லை.

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

CamScanner

5. பாடசாலை நீர் வழங்கல் தொடர்பில் அறிந்துகொள்ள வேண்டிய பிரதானமான விடயங்கள் கீழ்வருமாறு.

5.1 பாடசாலையின் அதிபர் விடுதி மற்றும் ஆசிரியர் விடுதிகள், நீச்சல் தடாகம் போன்ற விசேடமான நீர்த் தேவைகளுக்கு தனித் தனியாக நீர் இணைப்பு பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். இது வரையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிலிருந்து எந்தவொரு நீர் இணைப்புக்களையும் பெற்றுக் கொள்ளாத பாடசாலைகள்/ பிரிவெனாக்களுக்கு ஒரு பொது நீர் இணைப்பினை மாத்திரம் இணைப்புக் கட்டணங்களை அறவிடாமல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வழங்கும்.

5.2 தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையூடாக நீர்க் கட்டணப் பட்டியல்களைத் தயாரிக்கும் போது அவசியமாகும் பாடசாலைத் தரவுகளை அதிபர்கள் சரியான முறையில் தயாரித்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களின் கையளித்தல் வேண்டும்.

உதா: மாணவர் எண்ணிக்கை, கல்விசார் மற்றும் கல்விசாரா பணிக்குழுவினரின் எண்ணிக்கை, கட்டணப் பட்டியல் அனுப்பிவைக்கப்படவேண்டிய whatsapp தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி போன்றன.

அத்துடன், மாதாந்த நீர் பயன்பாடிற்குரிய கட்டணங்களை செலுத்துவதை நிரூபிப்பதற்காக பாடசாலைக்கு குறுந் தகவல் (SMS) செய்தியொன்று தொலைபேசி மூலமாக அனுப்பிவைக்கப்படும் என்பதால், தொலைபேசி இலக்கத்தில் ஏதேனும் வித்தியாசங்கள் இருப்பின் அது தொடர்பில் தாமதமின்றி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினை அறியப்படுத்த வேண்டும்.

5.3 தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்படும் இலத்திரனியல் கட்டணப் பட்டியலின் (e – bills) அச்சுப் பிரதியினை உரியவாறு கோவைப்படுத்தி பேண வேண்டும்.

5.4 நீர் கட்டணப் பட்டியலை கணிக்கும் போது ஏதேனும் ஒரு பாடசாலை, அங்கீரிக்கப்பட்ட நீர் பாவணையை மீறியிருக்கும் பட்சத்தில் (அதாவது ஒருவரது நீர் பாவணையானது ஒரு மாதத்திற்கு 400 வீதம் அனுமதியளிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கைக்கு உரித்தான ஏற்றுக்கொள்ளப்பட்ட பாவணையை தாண்டியிருக்கும் பட்சத்தில்) குறித்த மேலதிக நீர்க் கட்டணத்தை (Extra Charges to School) செலுத்துவதற்காக உரிய பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம்/ பிரிவெனாக்களின் வருடாந்த நன்கொடை நிதி/ பிரிவெனா அபிவிருத்தி நிதியத்தினூடாக செலவினை மேற்கொள்ள வேண்டும். இதற்காக ஒதுக்கீடானது பாடசாலையின் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

5.5 பாடசாலை அதிபர் விடுதி ஆசிரியர் விடுதிகளுக்காக தனித் தனியான நீர் இணைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றிற்குரிய நீர் கட்டணங்கள் அங்கு வதியும் உத்தியோகத்தர்களால் செலுத்தப்படல் வேண்டும். நீச்சல் தடாகத்திற்காக அறவிடப்படும் நீர்க் கட்டணம், குறித்த நீச்சல் தடாகத்தினூடாக கிடைக்கப் பெறும் வருமானத்திலிருந்து செலுத்தப்படலாம்.

5.6 2023ம் ஆண்டு ஜூன் மாதம் 01ம் திகதி முதல் 2024ம் ஆண்டின் டிசம்பர் மாதம் 30ம் திகதி வரையான காலப் பகுதிக்குரிய நிலுவையில் உள்ள நீர்க் கட்டணங்களைச் செலுத்தும் போது அரச பங்களிப்புக்குரிய கட்டணமானது

CS CamScanner

(Govt contribution) தேசிய பாடசாலை ஒன்றாயின் கல்வி அமைச்சினூடாகவும், மாகாணப் பாடசாலை ஒன்றாயின் உரிய மாகாணக் கல்வி அமைச்சினாலும் செலுத்தப்படும் என்பதுடன், அரச பங்களிப்பினையும் தாண்டி மேற்கொள்ளப்பட்டுள்ள மேலதிக நீர் பாவணைக்கான (Extra Charges to School) அறவீடானது குறித்த கட்டணப் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டிருப்பின், குறித்த தொகையினை பாடசாலை அபிவிருத்திச் சங்கம்/ பிரிவெனா நிதிக் கொடை/ பிரிவெனா அபிவிருத்தி நிதியத்தினூடாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்துதல் வேண்டும். அவ்வாறாக ஒரே தடவையில் செலுத்துவது ஏதேனும் ஒரு பாடசாலைக்கு நிதிசார் நெருக்கடிகளை ஏற்படுத்தும் பட்சத்தில், அது தொடர்பில் தமது பாடசாலைக்குரிய பிரதேசத்திற்குப் பொறுப்பான நீர் வழங்கல் சபையின் முகாமைத்துவ அலுவலகங்கள் மற்றும் பிரதேச பொறியியலாளர் அலுவலக வணிக உத்தியோகத்தர்களை சந்தித்து அவற்றை செலுத்துவதற்கான சலுகைக் காலம் ஒன்றைக் கோரிப் பெற்றுக் கொள்ள முடியும். பாடசாலையினூடாக செலுத்தப்படவேண்டிய நிலுவைக் கட்டணங்கள் தொடர்பான விபரங்களையும் குறித்த அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

5.7 ஏற்றுக் கொள்ளப்பட்ட நீர் பாவணைக்கு மேலதிகமாக நீரைப் பயன்படுத்தும் பாடசாலைகள், நீர் பாதுகாப்பு முறைகள், நீர் சுத்தீகரிப்பு மற்றும் குழாய்க் கிணறுகள் போன்ற மாற்றீட்டு நீர் வழங்கல் முறைகளை அறிமுகம் செய்வதனூடாக நீர்க் கட்டணங்களைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். பாடசாலை வளாகத்தினுள் காணப்படும் நீர்க் குழாய்கள் சேதமடைதல் மற்றும் நீர்க் கசிவு காரணமாக ஏற்படக்கூடிய நீர் விரயத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு பாடசாலை நிர்வாகம் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். நீரை சிக்கனமாக பயன்படுத்துதல் மற்றும் நீரைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் மாணவர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அதிபர்கள் ஒழுங்குசெய்ய வேண்டும் என்பதுடன், எப்போதும் அது தொடர்பில் பின் தொடரல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

6. சுத்தீகரிக்கப்பட்ட நீரை வழங்குவதற்காக நீர் வழங்கல் சபையானது பாரியதொரு தொகை நிதியினை செலவு செய்வதுடன், பாடசாலைகளிலிருந்து சலுகை அடிப்படையிலான கட்டணம் ஒன்றே அறவிடப்படுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட நீர் வளத்தை பாதுகாப்பதிலும், தேசிய வளமான நீர் வளத்தை விளைதிறன் மிக்க வகையில் பயன்படுத்துவது தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தி, இச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் உரிய தரப்பினரை அறிவுறுத்த நடவடிக்கையெடுத்தல் வேண்டும் எனவும் அறியத் தருகின்றேன்.

நாலக கலுவெவ<br>
செயலாளர்

பிரதிகள்

01. செயலாளர், நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சு – உரிய நடவடிக்கைக்காக/ தகவலுக்காக.
02. தலைவர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை – உரிய நடவடிக்கைக்காக/ தகவலுக்காக

CamScanner